29th January 1972]

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : ரூ. 82 லட்சம் செலவில் 750 எருமை மாடுகள் இருக்க, இந்தப் பண்ணை அமையும்போது, நாள் ஒன்றுக்கு ஆயிரம் அல்லது 1,200 லிட்டர் பால் கிடைக்கச் செய்யக் கூடும் என்று தெரிகிறது. அது மிகவும் குறைவு அல்லவா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாட்டுப் பண்ணை அமைப்பதற்கு திரு. கிருஷ்ணசாமி நாயுடு போன்றவர்கள் அனுபவம் பெற்றவர்களாக இருந்திருக்க வேண்டுமென்று கருதுகிறேன். பாலுக்காக அமைகின்ற பண்ணைகள் சில. மாடுகளின் தரத்தை நாடு முழுவதும் உணர்த்துவதற்கு அமைகின்ற பண்ணைகள் சில. முர்ரா எருமைகளின் தரத்திற்கு பிற எருமைகளை உயர்த்துவதற்காக அப்படி மத்திய வங்கியைப் போல இருந்து, அங்கிருந்து அனுப்பப்படுகிற பல்வேறு சாதனங்களின் மூலமாக—முர்ரா காளைகளின் மூலமாக—இந்த வட்டாரத்தில் நல்ல இன வளர்ச்சி அமைக்கப்படுவதாகும். உயர்ந்த தரத்திலுள்ள பால் தருகிற எருமைகளை வைத்து பண்ணை அமைப்பதால், 1,000 முதல் 1,500 லிட்டர் பாலையும் வழங்க அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

Family Planning Scheme

*60 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any incentive scheme is being proposed to be implemented by the District Collector, Thanjavur, for Family Planning drive in that district;

(*b*) if so, the nature of the scheme ; and

(*c*) whether the same will be followed in other districts ?

குடும்ப நலத் திட்டம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் குடும்ப நலத் திட்டத்திற்காக அந்த மாவட்ட ஆட்சித் தலைவரால் ஊக்கத் திட்டம் ஏதேனும் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அத்திட்டத்தின் தன்மை யாது ?

(உ) இத்திட்டம் ஏனைய மாவட்டங்களிலும் பின்பற்றப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, பல மாவட்டங்களில் குடும்ப நலத் திட்டம் நடைபெற்றிருந்தாலும், தஞ்சை மாவட்டத்தில் நடைபெறும் திட்டத்தில் வருகிற நோயாளிகள் மருத்துவ மனைகளில் நல்ல முறையில் வைக்கப்பட்டு அவர்கள் உடல் தேறிய பிறகு, அங்கிருந்து அனுப்பப்படுகிறார்கள். இதனால் அவர்கள் உடல் நலம்பெறுவது மட்டுமல்லாமல், குடும்ப நலத் திட்டமும் சரியாக நிறைவேறுகிறது. இதைப்பற்றி அவர்கள் மற்றவர்களிடம்

@ Printed as Appendix II on pages 270-271

சொல்வதற்கும் ஏதுவாக இருக்கிறது. மற்ற மாவட்டங்களிலும் இப்படிப்பட்ட அறுவை சிகிச்சை செய்து அனுப்புகிறார்கள். ஆனால் சிகிச்சை பெற்றவர்களுக்கு வெளியில் அனுப்பப்பட்ட இரண்டு மூன்று நாட்கள் கழித்து ஏதாவது உடல் நலக்குறைவு ஏற்பட்டால், அதைக் கண்டு பயந்து பலர் வருவதில்லை. இதை மனதில் கொண்டு தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் நடத்திய திட்டத்தின்படி மற்ற மாவட்டங்களிலும் இந்தக் குடும்ப நலத் திட்டத்தை நல்ல முறையில் விஸ்தரிக்க அரசு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தக் கேள்வியின் மூலமாக அங்கத்தினர் தஞ்சை ஜில்லாவில் நடைபெற்ற குடும்ப நலத் திட்டச் செயல்முறையை மனதில் கொண்டு தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் நடத்திய திட்டத்தின்படி நல்வாழ்வு நிலையங்கள் மிக நல்ல முறையில் மக்கள் விரும்பும் வகையில் பயன்பட்டன என்று சொன்னதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டம் அண்மையில்தான் 15—11—1971-ல் ஏறத்தாழ 40 நாட்களுக்கு நடைபெறுவதற்காகத் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டம் நல்ல முறையில் நடைபெறுகிறது என்று பத்திரிகை நிருபர்கள் தஞ்சை மாவட்டத்தில் சுற்றிப் பார்த்து எழுதியிருக்கிறார்கள். ஏறத்தாழ இதற்கு ஈடாக ஐந்தாறு நாட்கள் தங்கிச் செய்துகொள்ளவும், உடல் நலத்தையும் கவனித்துத் திருப்பியனுப்பும் முறை தென்னார்க்காடு, திருச்சி மாவட்டங்களிலும் கையாளப்பட்டது. அங்கே உள்ள நல்வாழவு நிலையங்களில் நோயாளிகளுக்குக் கலை நிகழ்ச்சிகளை அமைத்து மகிழ வைக்கிறார்கள். உணவு அளிப்பதிலும் வழக்கமாக அவர்கள் உட்கொள்ளும் உணவில்லாமல் நல்ல தரமான உணவை அளிப்பதற்கும், வேறு நோய் இருந்தால் அதற்கும் சிகிச்சையளித்தும் ஆறு நாட்கள் நிம்மதியாக இருந்து பிறகு அவர்கள் திரும்புவதற்கு ஏற்ற வகையில் செயல்படுகின்றன. மத்திய அரசிலிருந்து வந்த அதிகாரி ஒருவர் இதைப் பார்த்துவிட்டுச் சென்றபொழுது, இந்த முறையைப் பாராட்டிக் கடிதம் எழுதியிருக்கிறார் என்ற முறையிலும் இதைத் தொடர்ந்து அரசாங்கம் பின்பற்றும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மத்திய திட்ட அமைச்சர் திரு. சுப்ரமணியம் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் நடத்தப்பெற்ற இந்த நல்வாழ்வுத் திட்டத்தைப் பார்த்து நல்ல முறையில் பாராட்டிப் பேசினார்கள் என்பதையும் அரசிற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : விவரம் தெரியும். மேலும் அங்கத்தினர்கள் மக்களிடத்தில் சொல்லி இதற்குச் செல்வாக்குத் தேடித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பதற்கு எவ்வளவு அதிகமாகச் செலவாகும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இதற்கு ஓரளவு மாவட்ட ஆட்சியாளர்கள் மக்களிடமிருந்து நன்கொடை பெறுகிறார்கள். ஆனால் மேலும் மத்திய அரசு தருகிற உதவித் தொகை ரூ. 30 அடிப்படையில் வருவதையும் ரூ. 20 அதிக எண்ணிக்கையுள்ளவர்களுக்குச் செய்வதற்குத் தரும் செலவையும் விட ரூ. 10 அல்லது ரூ. 20 செலவாகிறது. அதையும் மாநில அரசுதான் இது வரையில் ஏற்றுக்கொண்டு செயல்படுத்தி வந்திருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS